REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஐப்பசி 21உ. திங்கள் (7—11—55) ★ ★ வெளியூர்: ஐப்பசி 22உ. செவ்வாய் (8—11—55) [இதழ் 124

நெய்வேலியிலா உரத் தொழிற்சாலை?

பொருளாதார ரீதியில் பழுப்பு நிலக்கரித் திட்டம் வெற்றி பெற்றால்தானும்!

புதுடில்லி, நவ 5—

சிந்திரி உரத் தொழிற்சாலையைப் பரவலாக்கும் திட்டங்களுக்கு ரூ. 7 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது; இவை 1958-ல் பூர்த்தியடையலாம். இதன்மூலம் நைட்ரஜன் கலப்பு கொண்ட உரங்கள் உற்பத்தி 60 சதவிகிதமாக உயரக்

(4-ம் பக்கம் பார்க்க)

'காங்கிரசுக்கு எதிர்ப்பு இராதெனக் காமராசர் கனவு காண வேண்டாம்'

'திருச்சி மாநாட்டினை எதிர்நோக்கட்டும்'

திருவொற்றியூர் கூட்டத்தில் அண்ணாதுரை எச்சரிக்கை

"அடுத்த பொதுத் தேர்தலில் காங்கிரசுக்கு எதிர்ப்பே இல்லாமல் செய்துவிட வேண்டும் என்று காமராசர் கனவு காண்பதாகத் தெரிகிறது. எல்லாக் கட்சியினரையும் தட்டிக் கொடுத்து தன்வயப்படுத்திவிடலாம் என அவர் எண்ணுகிறார். இந்த எண்ணத்தை மதுரை நகரசபைத் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் அவர் வெளியிட்டிருக்கிறார்.

"நம்மைப் பொறுத்தவரையில், வரப்போகும் தேர்தலில் காங்கிரசிற்கு எதிர்ப்பு இருத்தலாகாது என்பதை அனுமதிப்பதாக உத்தேசமில்லை. காங்கிரசிற்கு எதிர்ப்பு இருக்காதென காமராசர் கனவு காணவேண்டாம் என்று கூற விரும்புகிறேன்.

"வரப்போகும் திருச்சி மாநில மாநாட்டில், 'தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடுமா' என்ற கேள்விக்கு விடை கிடைக்கலாம்; அங்கு, 'தேர்தலில் ஈடுபடுவதா—வேண்டாமா' என்பதை முடிவு செய்பவர்களாக, கூடுகிற மக்களே இருப்பர்.

"இதர கட்சிகளில் எல்லாம், தலைவர்கள் திட்டம் தருவார்கள்; தொண்டர்களும், மக்களும் நிறைவேற்றுபவர்களாக இருப்பார்கள்; ஆனால், தி மு. கழகம் மக்கள் என்ன கருதுகிறார்களோ அதன்படிதான் நடந்துகொள்ளும்.

"தேர்தலில் ஈடுபடுவதா, வேண்டாமா—என்பது குறித்து மாநாட்டில் ஒரு நாள் முழுவதும் தோழர்கள் கருத்துக்களை வழங்குவார்கள். அவற்றை எல்லாம் கேட்கிற மக்கள் நன்றாகச் சிந்தித்து, 'தேர்தலில் ஈடுபடுவது அவசியம்' என்று கருதினால், அவ்வாறே கருத்தறிவிக்கலாம். 'ஈடுபடக் கூடாது' என்று விரும்பினாலும் தெரிவிக்கலாம். பெருவாரியானவர்கள் என்ன முடிவு கூறுகின்றனரோ, அதன்படிதான் தி. மு. கழகம் நடந்துகொள்ளும்.

"தேர்தலில் ஈடுபட வேண்டும்—என்று மக்கள் கருத்தறிவித்தாலும், அதற்கான பண வசதிகள் முதலியனவற்றை முழுவதுமாக தி. மு. கழகம் பெற்றிருக்கிறது என்பதல்ல; தேவையானால், சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் ஆகியோருடன் கூடக் கூட்டு சேர்ந்து தி. மு. கழகம் போட்டியிடக்கூடும். அரசியல் சதுரங்கம் எப்படி எல்லாம் மாறுமோ, யாருக்குத் தெரியும்? எனவே, காமராசர், 'காங்கிரசுக்கு எதிர்ப்பே இல்லாது செய்துவிடலாம்' என்று கனவு காணத் தேவையில்லை. வரப்போகும் தேர்தலில் காங்கிரசை எதிர்க்காமல் விடப்போவதில்லை என்பதை மட்டும் கூற விரும்புகிறேன்.

"இதனை நான் கூறுவதற்குக் காரணம், இங்கு ஒருவர், 'வரப்போகும் தேர்தலில், பெரியார் காங்கிரசை ஆதரிப்பதாகத் தெரிவித்திருக்கிறாரே, உங்கள் கருத்தென்ன?' என்று கேள்வி கேட்டிருக்கிறார்.

"பெரியார், காங்கிரசை ஆதரிப்பதாகத் தெரிவிக்கவில்லை. காமராசர் காங்கிரசை ஆதரிப்பதாகத்தான் தெரிவித்திருக்கிறார்—காமராசருக்கு சிறிது மொழி உணர்வு இருக்கிறது என்று அவர் கருதுவதால்! பெரியாருக்கு, காங்கிரஸ் இன்னும் பிடிக்காத ஒன்றாகவேதான் இருக்கிறது. இன்னும், பெரியாருக்கு, காங்கிரஸ் கூறும் 'ஏக இந்தியா' என்ற அரசியல் கொள்கை பிடிக்கவில்லை. 'தனி நாடு தேவை' என்ற கோரிக்கையை பெரியார் கைவிட்டுவிடவில்லை—என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

"பெரியார், காமராசர் காங்கிரசை ஆதரிக்கிறார் என்பதினாலேயே, பொதுத் தேர்தலில், காங்கிரசுக்கு எதிர்ப்பில்லாமலேயே விட்டுவிடவேண்டுமா என்பதை திருச்சி மாநாட்டில் கூடும் மக்கள் தீர்மானிப்பார்கள்,"

—என்று, தோழர் அண்ணாதுரை அவர்கள், திருவொற்றியூர் தி. மு. கழகச் சார்பில், 5—11—55ல் நடைபெற்ற மாநில மாநாட்டு நிதி அளிப்புக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'சிங்களவர் பிடிவாதம் கொண்டால் பிரிந்து போகத் தயங்கமாட்டோம்'

'தன்மானமுள்ள தமிழர் தமிழை இழக்கச் சம்மதிக்கமாட்டார்கள்'

இலங்கை மந்திரி முழக்கம்

"வகுப்புவெறி தலைதூக்காமல் இலங்கையின் அமைதி பாதுகாக்கப்பட வேண்டுமானால், இரண்டு மொழி மாநிலங்கள் அமைப்பதைத் தவிர வேறு வழி இல்லை. 'சுதந்திரத் தமிழ் மாநிலம்' அமைப்பதுதான் ஒரே வழியாகத் தோன்றுகிறது.

"சிங்களத்தைப்போல தமிழுக்கும் சம நிலை அளிப்பதினால், சிங்களம் மேலும் வளமாகுமே தவிர, சிலர் நினைப்பதைப் போல, அழிந்துபடாது.

"சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்பதை, சுயமரியாதையுடைய எந்தத் தமிழனும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

"சிங்கள நண்பர்கள், தமிழர்களுக்கு சம நிலை வழங்க இணங்கவில்லையானால், தனி நாடு அமைத்துக்கொண்டு சுதந்திரமாக வாழ்வதற்குத் தமிழர்கள் எப்போதும் தயாராகவே இருக்கின்றனர்,"

—என்று, இலங்கை நீதி, போக்குவரத்து இலாகாக்களின் மந்திரியான தோழர் வி. குமாரசாமி. கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுவரை எந்த ஒரு இலங்கை தமிழ் மந்திரியும்—ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள்—இவ்வாறு இவ்வளவு தீவிரமாக, தனித் தமிழ்நாடு கோரிக்கை பற்றிக் கருத்தறிவித்ததில்லை போதுதான் இலங்கை ஜனநாயக் காங்கிரஸ் கருத்தறிவிக்கிறது.

★

ஜனநாயகக் காங்கிரஸ் கோரிக்கை

சுமார் எட்டு இலட்சம் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பெற்றது என்று கருதப்படுகிற இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் செயற்குழு, தனது இன்றையக் கூட்டத்தில், 'இலங்கையில் சிங்களத்தைப் போன்றே தமிழ் மொழிக்கும் சம நிலை தரப்பட வேண்டும்' என்று கோரி தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

'ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் மொழி மூலம் பிரதிபலிக்கப்படுகிற கலாச்சாரத்தைப் பெற்றிருப்பதற்கான அடிப்படை உரிமையில்தான் இலங்கையின் ஒற்றுமை அமைந்திருக்கிறது,' என்றும் அந்தத் தீர்மானம் கூறுகிறது.

55 இலட்சம் சிங்களவருக்கும், 15 இலட்சம் தமிழருக்குமிடையே எழுந்துள்ள மொழிச் சிக்கல் குறித்து முதன் முதலாக இப்

சேலம் — திருச்சி இரயில் பாதை

மத்திய மந்திரி உறுதிமொழி?

சேலம், நவ. 5—

"இரண்டாம் திட்டத்தின்கீழ் புதிய இரயில் பாதைகள் அமைப்பதற்கான திட்டங்கள் தேர்ந்தெடுக்கும்போது, சேலம்—திருச்சி இரயில் பாதை அமைப்பு குறித்தும் பரிசீலிக்கப்படும்,"

என்று, சென்னை கவர்னருக்கு, இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி எழுதியுள்ள கடிதத்தில் உறுதி தந்துள்ளாராம்.

கவர்னர் அண்மையில் சேலம் வந்திருந்தபோது, மாவட்ட வர்த்தகக் கழகத்தினர் இதுகுறித்து முறையிட்டிருந்தனர் என்றும் தெரியவருகிறது.

'உன்னைவிட நானே உயர்ந்தவன்'

இரு மாநில முதன் மந்திரிகள் அடிபிடி சண்டை

நாகபுரி, நவ. 4—

மத்திய பிரதேசமா?—மத்திய பாரதமா? எது முன்னேறியுள்ளது?—என்பதற்காக, இரு மாநில முதன் மந்திரிகளும் ஒருவர் மீது ஒருவர் பாய்ந்துகொள்கின்றனர்.

'மத்திய பாரதம், மத்திய பிரதேச மாநிலத்துடன் இணைந்துவிடவேண்டும்' என்று, மாநிலக் குழு சிபாரிசு தெரிவித்துள்ளது.

'இது கூடாது; மத்திய பாரதம் தனி மாநிலமாகவே இருக்கவேண்டும்' என்று மத்திய பாரத முதன் மந்திரி உட்பட பலரும் கூறிவருகின்றனர்.

அதற்காக, 'மத்திய பாரதம் மத்திய பிரதேசத்தைவிட முன்னேறியுள்ளது' என்று, புள்ளி விவரங்கள் சிலவற்றை முதன் மந்திரி தாக்கர்மால் ஜெயின் வெளியிட்டாராம்.

'அந்தப் புள்ளி விவரங்கள் முழுமையானவை அல்ல; மேலும், தவறானவையுமாகும்,' என்று, மத்திய பிரதேச முதன் மந்திரி பண்டித ஆர். எஸ். சுக்லா தெரிவித்திருக்கிறார்.

"இந்தியாவின் மத்தியில் உள்ள மத்திய பிரதேசம் மலர் தோட்டமும் விலங்கினக் கூட்டமும், இயற்கை வளமும், மண்வளமும், காட்டு வளமும் நிரம்பியது; திறமை வாய்ந்த நிர்வாகத்தை உடையது; இந்த நிலையில் உள்ள மாநிலம், மாநில மக்களுக்கு மட்டுமின்றி, இந்தியா முழுமைக்குமே பயன்படக்கூடியது.

"பொருளாதார அபிவிருத்தியில் எந்த அம்சத்தை அடிப்படையாக வைத்து நிர்ணயிப்பதானாலும், மத்திய பிரதேசத்துடன் மத்திய பாரதம் போட்டியிட முடியாது. இப்போதுள்ள 14 மாவட்டங்கள் மட்டுமே மத்திய பாரதம் உற்பத்தி செய்யக் கூடிய அளவு உணவு உற்பத்தி செய்ய முடியும். மத்திய பாரதத்தில் இருப்பதைக் காட்டிலும் அதிகமான தொழிற்சாலைகள் இங்கு இருக்கின்றன; இங்கு அதிகமான பேர்களுக்கு வேலை கிடைக்கிறது

"நிலக்கரி உற்பத்தியில் மத்திய பாரதத்தைப்போல, மூன்றரை மடங்கு அதிகமாக, மத்திய பிரதேசத்தில் உற்பத்தியாகிறது,"

என்றெல்லாம்கூட, அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்படி, இரு முதன் மந்திரிகளும் தங்கள் தங்கள் மாநிலமே மற்றதைக் காட்டிலும் உயர்ந்தது—வளர்ந்தது—முன்னேறியது—என்று கூறிக்கொள்கின்றனர்; சண்டையிட்டுக்கொள்கின்றனர்.

'உலகத்தைத் துறந்தவர்கள்' செயல்

நேரு காரைத் தடுத்து நிறுத்த முயற்சித்த இரு சாதுக்கள் கைது

ராஜ்கோட், நவ. 6—

இந்நகருக்குப் பிரதமர் நேரு வருகை தந்தபோது, அவரது கார்முன் படுத்துத் தடுத்து நிறுத்த எத்தனித்த இரண்டு சாதுக்களைப் போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

போர்ச்சுகீசியர், கோவாவிற்குள் நுழைந்த தொண்டர்கள் சிலரை சுட்டு வீழ்த்தியது குறித்து திருப்திகரமான பதில் ஒன்று பெறுவதற்காக தாங்கள் பிரதமர் காரைத் தடுத்து நிறுத்த முயற்சித்ததாக போலீசாரிடம் அவர்கள் கூறியிருக்கின்றனராம்.

அவர்கள் நேருவுக்கு இது பற்றி தந்தி ஒன்று கொடுத்திருந்ததாயும், ஆனால் பதில் ஏதும் வரவில்லை என்றும் அவர்கள் கூறினராம்.

வேறு ஒருவரும், பண்டித நேரு வருகையை ஒட்டிக் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

போனஸ் வழங்கப்பட்டது

கோவை, நவ 5—

'நடு நிலைமையாளர்' தீர்ப்புப்படி, கோவை மாவட்டத்திலுள்ள 40 மில்களில் பணியாற்றும் 40,600 ஆலைத் தொழிலாளர்கள், கடந்த நான்கு நாட்களில், 1954-ம் ஆண்டிற்கு 'போனசாக' ரூ 50 இலட்சம் பெற்றுக்கொண்டனர்.

மேற்கு நாடுகள் யோசனை நிராகரிப்பு

அடுத்த செப்டம்பரில் ஜெர்மனி முழுமைக்கும் தேர்தல் நடத்தவேண்டுமென்ற மேற்கு நாடுகள் தெரிவித்த யோசனையை, கிழக்கு ஜெர்மனி நிராகரித்துவிட்டது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 7-11-'55 திங்கள்

துவக்கக் கல்வி

ஆரம்பக் கல்விக் குறித்து, டாக்டர் அழகப்பா ஆய்வுக் குழுவின் அறிக்கையின் ஒரு பகுதியைப் பொறுத்து கடந்த கிழமையில் நமது கருத்தறிவித்திருந்தோம்.

குழுவினர், ஆரம்பக் கல்வி பெறும் குழந்தைகள் கற்றுக் கொள்ளவேண்டிய மொழி குறித்து அறிவித்துள்ள கருத்துக்கள் ஊன்றிக் கவனித்தற்குரியன.

'ஆரம்பக் கல்வி பெறும் குழந்தைகளுக்குத் தாய்மொழியில் நல்ல தேர்ச்சி கிடைக்கச் செய்யவேண்டும்' என்று துவக்கத்தில் கூறிய ஆய்வுக் குழுவினர், தாய் மொழியுடன் சேர்த்து கற்பிக்கப்படவேண்டிய மொழி குறித்தும் கருத்தறிவித்திருக்கின்றனர்.

'ஆங்கிலம் — ஆங்கிலேயருடைய மொழி; அந்த அன்னிய மொழியை நமது மொழியாக நாம் கொண்டிருப்பது தேசிய கௌரவத்திற்கு இழுக்கு' என்று பேசுபவர்கள், ஆய்வுக் குழுவினரின் கருத்தைக் கண்ணுற வேண்டுகிறோம். ஆங்கிலம்—ஆங்கிலேய மக்களின் தாய் மொழியாக இருப்பது உண்மை; ஆனால், இன்று அந்த மொழிதான், உலகெங்கணுமுள்ள பல்வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட கோடானுகோடி மக்களுடனும் தொடர்பு கொள்ள உதவக்கூடியது. இன்றைய வளர்ந்துள்ள உலகச் சூழ்நிலையில், எந்த ஒரு நாடும், அல்லது மக்கள் கூட்டமும், உலகத்தின் இதர பகுதிகளினின்றும் ஒதுங்கித் தனித்து வாழ்ந்துவிடுவது என்பது இயலாத ஒன்றாகி வருகின்றது. அந்த நிலையில், பல நாட்டவருடன் தொடர்புகொள்ளப் பயன்படக்கூடிய மொழியாக ஆங்கிலம் மட்டுமே உலகப் பொது மொழியாக வளர்ந்திருக்கிறது. எனவே, அந்த மொழியை அன்னிய மொழி என்று கூறித் தள்ளிவிடுவது கூடாது என்பதை தென்னாட்டுக் கல்வி நிபுணர்களும், நாட்டுப் பற்றுக்கொண்டோரும் வலியுறுத்திச் சொல்லிவருகின்றனர்.

இந்தக் கருத்துக்குச் செவிமடுத்து, டாக்டர் அழகப்பா குழுவினர், 'ஆறாவது வகுப்பு முதல் எட்டாவது வகுப்புவரை ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்கலாம்' என்று சிபாரிசு தெரிவித்திருப்பது பாராட்டுதலுக்குரிய ஒன்று என்றாலும், 'இன்னும் இரண்டொரு வகுப்பு முன்னதாகவே ஆங்கில மொழி அறிவு புகட்டத் துவங்குவது அவசியமானது' என்று கல்வித் துறையில் முதிர்ந்த அனுபவம் பெற்ற சிலர் தெரிவிக்கும் கருத்துக்களுக்கும், குழுவினர், உரிய கவனம் தந்திருக்கலாம்.

அதேபோது குழுவினர், 'இந்தி போன்ற வேறெந்தப் புது மொழியும் ஆரம்பப் பள்ளிகளில் இடம்பெற வேண்டாம்' என்று தெரிவித்திருப்பது, சென்னை சர்க்காரும், இந்தியப் பேரரசும் ஊன்றிக் கவனித்தற்குரியதாகும். குழுவினரின் துணிவு, இதனைப் பொறுத்த மட்டில், தமிழ் மக்களின் பாராட்டுதலைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

'பள்ளிகளில் மதபோதனை தேவை இல்லை; ஆனால், ஒழுக்க போதனை செய்யப்படலாம்' என்று அழகப்பா குழுவினர் தெரிவித்துள்ள சிபாரிசு, எதிர்காலக் குடிமக்களான குழந்தைகளின் நலனில் மிகுந்த கவலையும், அக்கரையும்கொண்ட நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

'எல்லோர் மீதும் உரிய அன்பு செலுத்து; இரக்கம் காட்டு; நேசமுடன் பழகு; இன்சொல்லனாயிரு; பிறரையும் தன்னைப்போல நினை; ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் மேலது; நாணயமாயிரு; கோபங் கொள்ளாதே; உணர்ச்சிகளுக்கு உன்னை அடிமைப் படுத்திவிடாதே; பிறரை வஞ்சிக்க நினைக்காதே; பொய் சொல்லாதே; புறங் கூறாதே. கள் குடியாதே; கொலை புரியாதே'—என்பன போன்ற நல்லொழுக்கப் போதனையை இளம் சிறார்களுக்குத் தருவதற்காக, மதத்தின் துணையை நாடவேண்டும் என்று கூறுபவர்கள், மதத்தையும், ஒழுக்கத்தையுமே புரிந்துகொள்ளாதவர்கள். 'மதத்தின் மூலம்தான் ஒழுக்கம் கற்பிக்கப்பட வேண்டும்' என்பது, காலத்திற்கு ஒத்த ஒன்றல்ல என்பதை உணர்ந்து, குழுவினர், 'மதபோதனை கூடாது' என்று கருத்தறிவித்திருப்பது, பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மதத்தின் மீது பற்றுக் கொண்டு, அது கற்பிக்கும் ஆண்டவர்கள் மீது பக்தி கொண்டு, அந்த ஆண்டவர்கள் நாம் இறந்துவிட்ட பிறகு தரவிருக்கிற 'தண்டனை'யை மனதில் கொண்டு, அதற்காக அஞ்சி, ஒழுக்கமுடன் நடந்துகொள்ளுமாறு குழந்தைகளைத் தூண்டுவதினும், ஒழுக்கம், 'மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் மனிதனாக மதிக்கப்பட மிக அவசியமான அம்சம்' என்பதை குழந்தைகளுக்கு உணர்த்துவதுதான் மிக அவசியமானது என்பதை, தீவிர மத வாதிகளும்கூட, 'எதிர்க்க வேண்டும்' என்பதற்காக வேண்டுமானால் எதிர்க்கலாமே தவிர, உண்மையில், காரண காரியங்களுடன் எதிர்த்துரைப்பது கடினமானதாகும்.

அதற்கொப்ப, 'மதபோதனை கூடாது' என்று கூறியுள்ள குழுவின் சிபாரிசு வரவேற்கத் தக்கதாகும். இதர அம்சங்கள் குறித்து பிறிதோர் முறை ஆராய்வோம்.

தென்னாப்பிரிக்க இன ஒதுக்கல் கொள்கை!

தென்னாப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல் கொள்கை குறித்து கவலை தெரிவித்தும் ஐ. நா. தனது விசாரணை வேலையைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று கோரியும், 15 ஆசிய நாடுகளும், இரு தென் அமெரிக்க நாடுகளும் ஐ. நா. தனி அரசியல் குழுவில் புதியதொரு தீர்மானத்தைப் பிரரேபித்திருக்கின்றன.

பொதுச் சபை, தனிக் குழுவின் பணியைப் பாராட்டுகிறது; தென்னாப்பிரிக்க சர்க்காரின் இனவேறுபாட்டுக் கொள்கை கண்டு கவலையுறுகிறது; ஐ. நா. குழுவினருடன் தெ. ஆ. சர்க்கார் ஒத்துழைக்க தொடர்ந்து மறுப்பது குறித்து வருந்துகிறது; ஐ நா. குழுவினர் அறிக்கையில் தெரிவித்துள்ள கருத்துக்களை தென்னாப்பிரிக்க சர்க்கார் பரிசீலிக்க வேண்டும் என்று சிபாரிசு செய்கிறது; தொடர்ந்து ஐ நா. சபையின் வேண்டுகோளை நிராகரித்துவிட்டு, இன ஒதுக்கல் கொள்கையை தெ. ஆ. சர்க்கார் கடைப்பிடிப்பது கண்டு பொதுச் சபை வருந்துகிறது — என்பன போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக அமைகிறது, அந்தத் தீர்மான வாசகம்,

சீன கல்வித் துறையில் சர்க்கார் கட்டுப்பாடு

இந்தியக் கல்வித் தூதுக் குழுத் தலைவர் தகவல்

"கண்டிப்பான முறையில், மார்க்சீயக் கொள்கைகளின்படியே சீனாவில் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. மேலேயிருந்து கீழே வரையில், அங்கு, அரசியலார் கூறுகிற முறைப்படியே கல்வி கற்றுத் தரப்படுகிறது; மதச் சார்பற்ற முறையிலேயே கல்வி கற்றுத் தரப்படுகிறது. குழந்தைகளின் கல்விப் பிரச்சினையில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் கல்விக்காகவும் அங்கு ஏராளமான பணம் செலவிடப்படுகிறது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்காகவும், கலை. இலக்கிய நிலையங்களுக்காகவும் கல்வி அதிகாரிகள் விசேட கவனம் செலுத்துகின்றனர்."

என்று கடந்த ஒரு மாத காலமாக சீனாவில் சுற்றுப் பயணம் செய்த இந்தியக் கல்வி நிபுணர்கள் தூதுக் குழுவின் தலைவர் டாக்டர் சி. பி. இராமசாமி (ஐய்யர்) குறிப்பிட்டுள்ளார்.

'கேரளத்துடன் கூடலூர் இணையலாகாது'

மக்கள் சபை உறுப்பினர் கருத்து

உதகமண்டலம்—

"நீலகிரி மாவட்டத்தில் உள்ள கூடலூர் தாலுகாவை கேரள மாகாணத்துடன் இணைக்க வேண்டும் என்பது ஏற்க இயலாத ஒன்றாகும்; தங்கள் மொழி எதுவாயிருப்பினும் கேரளத்துடன் இணைவதற்கு கூடலூர் தாலுகா மக்கள் விரும்பவில்லை; ஆனால், இவ்வட்டாரத்திற்கும்—தங்களுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லாத வெகு சிலர்தான், இவ்விணைப்பைக் கோருகின்றனர்,"

என்று, மக்கள் சபை உறுப்பினர் திரு. என். எம். லிங்கம் என்பார் கருத்தறிவித்துள்ளார்.

கம்யூனிஸ்டுகளின் கொள்கையும் அதுதானும்!

திருச்சூர்—

"மொழிவாரி அடிப்படையிலேயே மாகாணங்களின் சீரமைப்பு அமையவேண்டும்—இதுதான் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கையாகும்; குழுவின் சிபாரிசுகள் பெரியதோர் ஏமாற்றத்தையே தந்துள்ளது; ஏனெனில், அந்த அம்சத்துக்கு, இரண்டாந்தரமான முக்கியத்துவத்தையே குழு அளித்துள்ளது,"

என்று, தோழர் பி. ஜீவானந்தம் அவர்கள், இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

ரயில்வே காலனிகளில் 'மதுவிலக்கு'!

இந்திய சர்க்கார் உத்தரவு

புதுடில்லி, நவ. 4—

இரயில்வே காலனிகளிலும், இரயில்வே ஊழியர்கள் பெருவாரியாக வசிக்கும் இடங்களிலும் மது உபயோகத்தை ஒழிக்குமாறு, மதுவிலக்கு அமுல் செய்யாத மாநில சர்க்கார்களை மத்திய சர்க்கார் கேட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இரயில்வே தொழிலாளர்கள் பெருவாரியாக வாழும் பகுதிகளில் உள்ள கள், சாராயக் கடைகளை அகற்றுமாறு கோரப்பட்டிருக்கிறதாம்.

மேலும், தகுந்த பிரச்சாரத்தின் மூலமும், இரயில்வே காலனிகளில் மதுக்குடியை ஒழிக்க முற்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இரயில்வே அதிகாரிகள், காலனிகளில் மட்டுமே மேலும் மதுக்குடிக்கு சட்ட ரீதியான தடை விதிப்பதுபற்றியும் யோசிக்க வேண்டுமெனக் கோரியுள்ளனராம்.

உத்தர பிரதேச சர்க்கார் ஏற்கனவே இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவிட்டதாகவும், இரயில்வே இலாகாவினருக்கு தங்களது பூரண ஒத்துழைப்பைத் தரச் சம்மதிப்பதாகத் தெரிவித்திருப்பதாயும் தெரியவருகிறது.

போக்குவரத்துக்களில் சீர்திருத்தங்கள்

சென்னை சர்க்கார் உத்தரவு

போக்குவரத்து ஏற்பாடுகளில் சீர்திருத்தம் செய்வதற்காக சிறிது காலத்திற்கு முன்னர், சென்னை நகரசபைக்கு, சர்க்கார், மானியமாக ரூ. 1-இலட்சம் அளித்தனர். அதில் ரூ. 15,000 செலவில், பஸ்கள் நிற்குமிடங்களில் தங்கும் நிலையங்கள் (ஷெல்ட்டர்கள்) அமைப்பதற்கு சென்னை சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

அச்சிலும், அமைப்பிலும் சிறந்த பிரசுரங்கள்

ஆட்சியினர் பரிசுப் போட்டிக்கு 1,200 வெளியீடுகள்

புதுடில்லி, நவ. 5—

அச்சிலும், அமைப்பிலும் சிறந்த பிரசுரங்களுக்கு அரசாங்கப் பரிசுகள் வழங்குவதற்காக மத்திய சர்க்கார் தகவல்—ஒலிபரப்பு மந்திரி காரியாலயத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட போட்டிக்காக 11 மொழிகளில் பலவிதப் புத்தகங்கள் 600 வந்திருக்கின்றனவாம். மற்றும், தினசரிச் செய்திப் பத்திரிகைகள் 130, சஞ்சிகைகள் 80, சுவரொட்டிகள் 157, சிறுவெளியீடுகள் 140 வந்துள்ளன; இவை தவிர காலண்டர்கள், டைரிகளும் வந்து சேர்ந்துள்ளனவாம்.

பரிசுகள், டாக்டர் எஸ் இராதா கிருஷ்ணன் அவர்களால் நவம்பர் 8-ந் தேதி புதுடில்லியில் வழங்கப்படும். அதே சமயத்தில் போட்டிக்காக வந்துள்ள பிரசுரங்கள் காட்சிக்காக வைக்கப்படும்.

மத்திய ஆட்சியினர் கடன்தருகின்றனராம்!

சென்னையைச் சேர்ந்த செம்பியம், கோடம்பாக்கம், திருவான்மியூர் ஆகிய இடங்களில், சாக்கடை நீரைப் பயன்படுத்தி மாட்டுத் தீவனப் பயிர்களை உற்பத்தி செய்வதற்காக சில நிலங்களை எடுத்துக் கொள்ளுவதற்கு சென்னை நகர சபை உத்தேசித்திருப்பதாகவும், இதற்காக ரூ. 16 இலட்சம் மத்திய சர்க்கார் கடன் உதவி செய்வதாகவும் பாளையங்கோட்டையில் நடைபெற்ற சென்னை மாநில மாட்டுத் தீவனம், மேய்ச்சல் நிலக் கமிட்டி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டதாம்.

ஏழைகள் தொகையும், பணக்காரர் செல்வமும் குறைந்து வருகிறதாம்!

ஏழ்மையில் இடர்படும் மக்களை காண்பதரிதாம்!

சென்ற 15 ஆண்டுகளில் அமெரிக்காவில் 'நடுத்தர வகுப்பினர்' தொகை அதிகமாகிவிட்டது

நிலப் பிரபு முறையும், வர்க்க உணர்ச்சியும் இல்லாத சமுதாயம் அமெரிக்க சமுதாயம்; எனவே, நடுத்தர வகுப்பு என்பது, நடுத்தர வருவாயுள்ள மக்களைக் குறிக்குமேயன்றி, சமுதாயத்தில் நிலையான ஒரு வகுப்பைக் குறிக்காது.

யுத்தத்திற்குப்பின் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் செழிப்புக்கு, பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவோரின் வருவாய் கூடியுள்ளதே காரணமாகும் என்பதை அது காட்டுகிறது பொருளாதார மாறுதலால் சமூக வாழ்க்கையிலும், அரசியலிலும் மாறுதல் நிகழுமாதலால், அத்துறைகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களுக்கும் அது விளக்கங் காட்டுகிறது.

இந்த முன்னேற்றம் மிகவும் விரைவாக நடைபெற்றுள்ளது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் தொழிலாளரின் வருவாய் முன்னையினும் மும்மடங்காகியிருக்கிறது. குமாஸ்தாக்கள் முதலியோரின் வருவாய் இருமடங்காகியிருக்கிறது. நடுத்தர வகுப்பினர் தொகை கூடியதற்கு இவ்விரண்டும் காரணங்களாகும்.

15 ஆண்டுகளுக்கு முன் பெரும்பலான மக்களைக்கொண்ட மிகப் பெரியதாயுள்ள ஒரே தொகுதியினரின வருமானம் ஆண்டுக்கு 1,000 முதல் 2,000 டாலர் வரை இருந்தது. இன்று மிகப் பெரிய தொகுதியினர் தொகை 1,16,40,000; அவர்கள், ஆண்டுக்கு 5,000 முதல் 7,500 டாலர் வரை சம்பாதிக்கிறவர்கள்.

அதற்கு அடுத்த பெருந்தொகுதியினர் 82 இலட்சம் பேர். அவர்கள் 3,000 முதல் 4,000 டாலர் வரை சம்பாதிக்கிறவர்கள். 10,000 முதல் 15,000 வரை சம்பாதிப்போர் தொகையோ 34 இலட்சமாகும்.

இன்று 5,000 டாலருக்கு அதிகமாக வருவாயுள்ள குடும்பங்கள் 1,70,00,000 ஆகும்; இது சம்பாதிக்கும் குடும்பங்களில் மூன்றிலொன்றாகும். பொருள்களை வாங்கும் சக்தி வாய்ந்தவர்களுள் பெரும்பாலோர் இப்பகுதியினரே.

அமெரிக்காவில் இன்று ஏழ்மையால் இடர்படும் மக்களைக் காண்பது அரிது.

ஆண்டுக்கு 1,000 டாலருக்குக் குறைவான வருவாய் உள்ளவர்கள் தொகை 80 இலட்சமாகக் குறைந்துவிட்டது.

ஆண்டுக்கு 20,000 டாலர் அல்லது 25,000 டாலர் வருமானம் உள்ளவர்கள் வகைக்கு $2\frac{1}{2}$ இலட்சம் பேர்தான் இருக்கிறார்கள். அவர்களது வருவாய் 4·6 சதவிகிதம் குறைந்துவிட்டது; நடுத்தர வகுப்பினர் எனப்படுவோர் வருவாயோ கூடியவண்ணமாயிருக்கிறது.

'அமெரிக்காவில் ஏழைகள் தொகையும் பணக்காரர் செல்வமும் குறைந்து வருகின்றன,' என்று, இது பற்றிய ஆராய்ச்சி நடத்தியவர்கள் சொல்கிறார்கள். ஆனால், உயர்ந்தவருவாய் உள்ளவர்களது வருமானம் குறைந்துள்ளதைவிட சாதாரண வருவாய் உள்ளவர்களது வருமானம் பொதுவாகக் கூடியுள்ளதே இன்றைய நிலைக்கு உண்மையான காரணமாகும்.

'நடுத்தர வகுப்பு' ஏற்பட்டதற்கு வருவாய் சமமானது காரணமென்று சொல்வதைவிடப் பெரும்பான்மையோரது வருவாய் கூடியது அதற்குக் காரணம் என்று சொல்வதே பொருந்தும்.

கழகச் செய்திகள்

சென்னை 46-வது வட்ட தி. மு. கழகம்

29—10—55ல் நடைபெற்ற கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டத்தில், துணைச் செயலாளர் தோழர் வ. வில்லவன் கோதை அவர்களது விலகல்கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருக்குப் பதிலாகத் தோழர் கா. ரா. சம்பந்தம் அவர்கள் துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சென்னை-சூளை (17-வது வட்டம்) தி. மு. கழகம்

30—10—55 மாலை 6 மணியளவில், சென்னை சூளை சட்டண்ண நாய்க்கன் தெரு 48-ம் எண்ணுள்ள இல்லத்தில் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, கழக அறிக்கையை ஏற்றுக்கொண்டும், கிளைக் கழக ஆறு மாத வரவு - செலவு கணக்குகளும், முத்தையா பள்ளியின் ஆறு மாத வரவு - செலவுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டும், சூளையில் உள்ள பல முட்டுச் சந்துகளை நீக்கி, நல்ல நடமாடும் வீதிகளாக்குமாறு நகராண்மைக் கழகத்தாரைக் கேட்டுக்கொண்டும், பீர்மேடு—தேவிகுளம் ஆகிய தாலுகாக்களை தாய்த் தமிழகத்துடன் சேர்த்து,—'தமிழ் நாடு' என்று பெயரிடுமாறு அரசியலாரைக் கேட்டுக்கொண்டும். சூளை கிளைக் கழகத்திற்கென சொந்தக் கட்டிடம் வாங்குவதென்றும், அதற்கான நிதி திரட்டப் பொதுச் செயலாளரின் அனுமதியைப் பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகம்

29—10—55 இரவு 9-30 மணிக்கு நடைபெற்ற கிளைக் கழகச் செயற் குழுக் கூட்டத்தில், 9—11—55-ல் நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்தில், மாநில மாநாட்டிற்கு நிதியளிப்பதென்றும், தோழர்கள் அருட்சிவவர்மன், இளவழகன் ஆகியோரை சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடக்காததால் கழகத்தை விட்டு நீக்கியும் முடிவு செய்யப்பட்டது.

பொன்மலை—மேலகற்கண்டார்கோட்டை தி. மு. கழகம்

20—10—55 இரவு 7 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் சே துரைராஜ் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், 'நம் நாடு' இதழில் வெளிவந்த இரயில்வே தொழிற் சங்கத்தில் கழகத் தோழர்கள் ஈடுபடுவது குறித்தக் கடிதமும், பொதுச் செயலாளர் அனுப்பிய பதில் கடிதமும் கழக உறுப்பினர்களுக்குப் படித்துக் காட்டப்பட்டன ஏனைய தொழிற்சங்கங்களில் சேர்ந்துள்ள கழகத் தோழர்களை மெல்ல மெல்ல விலகும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னிமலை (கோவை) தி. மு. கழகம்

31—10—55 இரவு 9 மணியளவில் கழகப் பணிமனையில் நடைபெற்ற கிளைக் கழக நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தோழர் ஏ. எஸ். சாமி அவர்களது விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டும், அவருக்குப் பதிலாகத் துணைச் செயலாளராகத் தோழர் மை. அ. முருகேசனும், நிர்வாகக்குழு உறுப்பினராக தோழர் கே. சகுனுதனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், 14—11—55ல், கிளைக் கழகச் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

மேலலப்புதூர் (திருச்சி) தி. மு. கழகப் படிப்பகத் துவக்கம்

30—10—55 காலை தி. மு. கழகப் படிப்பகத் துவக்க விழாவையொட்டி, தோழர் சா. செல்வராசன் தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம் எஸ். மணி, நாகசுந்தரம், நெடுமாறன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கல்லார்-வால்பாறைவட்டம் தி. மு. க. பொதுக்கூட்டம்

30—10—55 காலை 8 மணியளவில், கல்லார் எஸ்டேட் தி. மு. கழகக் கிளை சார்பில், தோழர் கே. பி. பிச்சைமுத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. பி. மருதமுத்து, ஜே. பி. ஜெபக்கனி, ஆ. க. வேலவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சேதவத்தை (இலங்கை) தி. மு. கழகம்

30-10-55 மாலை 5 மணிக்கு, கிளைக் கழக உறுப்பினர் கூட்டம், கழகப் பணிமனையில் தோழர் த. புதுமைவாணன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பி. என். சேரன், செல்லையா, கலைமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பின்னர், தோழர்கள் த புதுமைவாணன், எஸ். செல்லையா, கலைமணி, பி. என் சேரன் ஆகியோரை முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதியாகக் கொண்ட நிர்வாகக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்ட இறுதியில், ஈழத்து அரசாங்க மொழிகளாகத் தமிழும் சிங்களமும் இருக்கவேண்டும் என்று இலங்கைசர்க்காரையும், தமிழ் நாட்டில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்று சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொண்டும், இலங்கை தி. மு. கழகச் சார்பில் ஒரு தொழிற் சங்கம் ஏற்படுத்தி, உழைப்பாளர் உரிமைக்கு உழைக்குமாறு தலைமை நிலைய நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காஞ்சி ஆசிரியர் சங்க கல்வி வார விழா

அண்ணுதுரை துவக்க உரை

தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நடத்தப்படும் கல்வி வார விழாக் கொண்டாட்டம், காஞ்சி ஆசிரியர் சங்கத்தினரால், 3—11—55 மாலை 5 மணிக்கு காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி நூற்றுண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது.

தோழர் சி. என். அண்ணுதுரை துவக்க உரையாற்றினர்.

நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. சீனுவாசராகவன் தலைமை வகித்தார். பல உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் குழுமியிருந்தனர்.

'பழைய ஏற்பாடுகளும்—புதிய எண்ணங்களும்' என்பது பற்றி அண்ணு அவர்கள் விரிவுரையாற்றினர்.

சங்கச் செயலாளர் தோழர் சீனுவாசன் நன்றி கூறினர்.

அறிஞர் அண்ணு மன்றம்

2—11—55-ல், பிராமன்மலை அறிஞர் அண்ணு மன்றச் செயற் குழுக் கூட்டம், தோழர் ஞா. தியாகஅரசு தலைமையில் நடைபெற்றது. துணைச் செயலாளர் தோழர் நா. இரத்தினம் அவர்களின் விலகல் கடிதத்தை ஏற்றுக் கொண்டும், துணைச் செயலாளராகத் தோழர் இராம. சிங்காரம் தேர்ந்தெடுத்தும் முடிவு செய்தது.

மாநில மாநாட்டு நன்கொடை

மாநில மாநாட்டுக்கு நன்கொடை அளிக்க ஆர்வத்தோடு துடித்துக்கொண்டிருக்கும் தனிப்பட்ட தோழர்கள் நேரே உடனடியாகத் தலைமை நிலயத்திற்கு நன்கொடைகளை அனுப்பிவைக்குமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆங்காங்குள்ள கழகத்திற்கு ஆதரவான தனிப்பட்ட அமைப்புகளும், நிதி சேர்த்துவிட்ட மாவட்டங்களைச் சார்ந்த கிளைக் கழகங்களும் நன்கொடைகளைத் தொடர்ந்து அனுப்பிவைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

'மாநில மாநாட்டு நிதிக்கு' என்று குறிப்பு எழுதி, நன்கொடை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:—

பொதுச்செயலாளர், தி. மு. கழக தலைமை நிலயம்,
'அறிவகம்', — இராயபுரம், சென்னை-13.

★

இதுவரையில் தலைமை நிலயத்திற்கு நன்கொடை அனுப்பி வைத்துள்ளவர்களின் பட்டியல்:—

முன் (28—10—55) இதழ்த் தொடர்ச்சி	362	12	3
ஏ. என். கிருஷ்ணன், ராயவேலூர்	2	0	0
மணி, இப்ராகிம், ராஜ், பால்ராஜ் ஆகியோர், புனு	3	0	0
சிங்கப்பூர் (மலேயா) தோழர்கள் நன்கொடை:			
ரூ. 7-10—0 அனுப்பிய தோழர்கள்			
ஆ. சு. இராமலிங்கம், நா. இராமலிங்கம் ஆகியோர்	15	4	0
ரூ. 4-10—0 அனுப்பிய தோழர்கள்			
கு வீ. கோவிந்தராசு, மா. கோவிந்தசாமி ஆகியோர்	9	4	0
ரூ. 4—9—0 அனுப்பிய தோழர்கள்			
கு. காசிநாதன், சு. தியாகராசன், எம். அமிர்தலிங்கம், எம். பாலகிருஷ்ணன் ஆகியோர்	18	4	0
ரூ. 3—0—0 அனுப்பிய தோழர்கள்			
கா. மு. ராதா, ஆ. ம. ராமன், ஆர். நக்கீரன், ந. ராமகிருட்டிணன், ப. நடராசன், ஆ. கோவிந்தராஜ், கு. சு. சுப்பிரமணியம், ப. முத்துகிருஷ்ணன், கா. ஆ. மாரிமுத்து, ந. செ. குழந்தைசாமி, வா. ந. சோமு, ந. கோவிந்தசாமி, சி துரைராஜ், எஸ். ஏ. ராமு, ஆ. பாலையன், ப. க. சாமிநாதன், த. பாவாடைசாமி, பி. எம். கோவிந்தராஜ், ரா. வெங்கடாசலம், நமசிவாயம், எம். ஜெகநாதன் ஆகியோர்	63	0	0
தி. அ. கணபதி	2	4	0
ரூ 1—8—0 அனுப்பிய தோழர்கள்			
டி. கே. அருணு, ஏ. பக்கிரிசாமி, மகா. ராமசாமி, ரா. வேலாயுதம், மு. தவமணி, எம். எஸ், ஆறுமுகம், எஸ். கணபதி, பொ. சொக்கலிங்கம், பி. ராஜகோபால், க. கோவிந்தராஜ், வே. அ. குருந்தையன், ரெ. பரமசிவம், கே. கைலாசம், சா. மு. யூசுப், செல்லையன், மா. ஜெகதீசன், செ. கு. பக்கிரிசாமி, சு. ஆறுமுகம், து. கோவிந்தராஜ், இரா. சுப்பையா, நா. பக்கிரிசாமி, கே. சுப்பிரமணியம், கா. முத்தையன், கே. பி. சாமி, பொ. து. சுப்பையா, எம். குழந்தைவேல், சி. திருவேங்கிடம், கே. தாவுசா, மு. கருப்பையா, அரு. மு. அருணுசலம், ஏ. முகமது மைதீன், ஜி. டி. ராஜு, கே. சாமி, எஸ். கோவிந்தராசு, சோமு ஆகியோர்	52	8	0
ரூ. 0-12—0 அனுப்பிய தோழர்கள்			
ஆர். சுப்பிரமணியம், எஸ். பசுபதி, பி. ஆர். மாரிமுத்து, ஜி. எஸ். சாமியப்பன், டி. கருப்பையா, மா. முனுசாமி, டி. மாரியப்பன், வை. மாரிமுத்து, பொ. உத்திராபதி, க. அப்பாதுரை, உ. பாலையன், கோ. மு. கருப்பையன், கே. எஸ். சம்பந்தமூர்த்தி (0—8—0) ஆகியோர்	9	8	0
ஆக மொத்தம் ...	537	12	3

நகரசபைத் தேர்தல்கள் : ஒரு கண்ணேட்டம்

சென்னை மாநிலத்தில், எல்லா இடங்களிலும் நகரசபைத் தேர்தல்கள் முடிந்துவிட்டன. இம்மாநிலத்தில் மொத்தம் 55 நகர சபைகள் இருக்கின்றன; அவற்றில் 53 நகர சபைகளுக்குத் தேர்தல் நடைபெற்றுள்ளது. மகாமகம் காரணமாக கும்பகோணத்திலும், தொகுதி நிர்ணயத் தவறு காரணமாக ஆம்பூரிலும் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

45 நகர சபைகளில் போட்டியிட்ட காங்கிரசுக்கு 18 நகரசபைகளில் பெரும்பான்மை இடம் கிடைக்கவில்லை.

53 நகரசபைகளிலுமுள்ள மொத்த இடங்கள் 1,452 ஆகும்; 300 இடங்களில் காங்கிரஸ் தோற்றது; 200 இடங்களுக்குப் போட்டியிடவில்லை.

45 நகரசபைகளுக்கு காங்கிரஸ் 1059 அபேட்சகர்களை நிறுத்தியது. 701 பேர் வெற்றி பெற்றனர். 27 நகரசபைகளில் காங்கிரசுக்கு நிகர மெஜாரிடி கிடைத்துள்ளது. இதர நகரசபைகளில் சிலவற்றில் 50 சதவிகித இடங்களும், மற்றவைகளில் 50 சதவிகிதத்திற்கு சற்று குறைவாகவும் காங்கிரசுக்கு கிடைத்தன. இவைகளில் சுயேச்சைகளின் ஆதரவுடன் நிகர மெஜாரிடியை பெற முடியுமென காங்கிரஸ் நம்புகிறது. ஏனெனில் தேர்தல்களின்போது காங்கிரஸ் இவ்வித சுயேச்சைகளுக்கு ஆதரவளித்துள்ளது. இவர்களை எதிர்த்து அதிகாரபூர்வமான அபேட்சகர்கள் யாரும் நிறுத்தப்படவில்லை.

மங்களூரில், கட்சி ரீதியில் காங்கிரஸ் ஒன்றுதான் போட்டியிட்டது. போட்டியிட்ட 30 இடங்களில் 23 காங்கிரசுக்கு கிடைத்தது.

தென் கன்னடத்தில் மற்ரெரு நகரசபையான உடுப்பியில் போட்டியிட்ட 11 இடங்களில் 10 இடங்களை காங்கிரஸ் வென்றது. சுயேச்சைகளுக்கு 9 இடங்களும், கம்யூனிஸ்டுகளுக்கு 1 இடமும் கிடைத்தது.

* * *

மதுரை 9-வது வார்டில் நடைபெற்ற நகராண்மைக் கழகத் தேர்தலில், தோழர் எஸ். முத்து, எதிர்த்துப் போட்டியிட்ட கம்யூனிஸ்டு அபேட்சகரைத் தோற்கடித்து வெற்றி கண்டுள்ளார்.

* * *

ஈரோடு 22-வது வார்டில், தோழர் எம். சின்னப்பன் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

* * *

கரூர் 12, 22, 17-வது வார்டுகளில் தோழர்கள் என். ஆர். இராமசாமி, ரா. வைரப்பெருமாள், வெங்கடராமன் ஆகியோர் தங்களை எதிர்த்து நின்ற காங்கிரஸ் அபேட்சகர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றிருக்கின்றனர்.

* * *

சேலம் 9, 16, 24, 26, 28-வது வார்டுகளில், முறையே, தோழர்கள் பி. கே. வரதராஜுலு, பி. கே. மன்னர், ஏ. மாரியப்பன், ஜி. எம். ஒபுளி, டாக்டர் கே. பி. கோபால் ஆகியோர் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றியடைந்தனர்.

* * *

தேவகோட்டை 15-வது வார்டில் தோழர் கா. மீனுட்சிசுந்தரம் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். 7, 11வது வார்டுகளில் தோழர்கள் முறையே உ. சீனிவாசன், இராம. வெள்ளையன் ஆகியோர் தங்களை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் அபேட்சகர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளனர்.

* * *

சிவகாசி 10, 11, 15-வது வார்டுகளில் முறையே தோழர்கள் ஏ. சுப்பையா, பி. சுப்பையா, ஏ. சண்முகவேல், எதிர்த்துப் போட்டியிட்ட அபேட்சகர்களை விடப் பெருவாரியான வாக்குகள் பெற்று வெற்றியடைந்தனர். 14-வது வார்டில் தோழர் கே. கோபாலன் (தி. மு. க. ஆதரவாளர்), எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சை உறுப்பினரைத் தோற்கடித்து வெற்றி பெற்றுள்ளார்.

ஃ ஃ ஃ

திருச்சி 13-வது வார்டில், சங்கரன் புரொக்ரெஸ்ஸிவ் டியூட்டோரியல்ஸ் உரிமையாளர் சங்கரன் அவர்களது சகோதரியார் தோழியர் தங்கலட்சுமி வெற்றி பெற்றுள்ளார்.

ஃ ஃ ஃ

திருவண்ணுமலையில் தோழர் ப. உ. சண்முகம் வெற்றி கண்டுள்ளார்.

ஃ ஃ ஃ

சாத்தூக்குடியில் தோழர்கள் கே. வி. கே. சாமி, அய்யாச்சாமி ஆகியோர் வெற்றியடைந்திருக்கின்றனர்.

ஃ ஃ ஃ

சென்னை கேப்பியர் பார்க் வட்டத்தில் தோழர் அ. பொ. அரசம், 9-வது வட்டத்தில் தோழர் வி. முனுசாமியும் வெற்றி கண்டுள்ளனர்.

செய்திச் சுருள்

★

சென்னை 'வார்னிஷ்' தொழிலாளர் சங்கம்

3—11—55-ல், சென்னை தங்கசாலை, 366-ம் எண்ணுள்ள இல்லத்தில், சென்னை வார்னிஷ் தொழில் நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர் பொதுக்கூட்டம் ஒன்று தோழர் ஏ. இரத்தினம் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றது. வார்னிஷ் தொழிலாளர் நிலைமை, குறைபாடுகள் பற்றிப் பல தோழர்கள் பேசினர். தலைவர், தொழிலாளர் கடமை பற்றியும், தொழிற் சங்கத்தின் அவசியம் பற்றியும் பேசினர். பின்னர் தோழர் ஏ. இரத்தினம் அவர்களைத் தலைவராகக்கொண்ட சங்க நிர்வாகக் குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

'வளர்பிறை' கையெழுத்து வெளியீட்டுத் திறப்பு விழா

30—10—55ல், அரிசிக்கரை அண்ணு படிப்பகச் சார்பில், தோழர் கே. பி. வேலன் அவர்களை ஆசிரியராகக்கொண்ட 'வளர்பிறை' என்னும் கையெழுத்துத் தமிழ்த் திங்கள் வெளியீட்டின் திறப்பு விழா, தோழர் என். கே. மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர் சோமசுந்தரம் 'தமிழ்த் தொண்டு' பற்றி விரிவுரையாற்றியபின், மலரினைத் துவக்கி வைத்தார். பின்னர், தோழர்கள் கே. பி. வேலன், இராவணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வெளியே பயிரை மேய்கிறதாம்!

'ஒழிப்போம்'என்பவர்களே விபசாரத்தை வளர்க்கின்றனராம்!

ஊற்றுக்காலை உற்று நோக்க உபதேசிக்கும் பண்டிதர் தோற்றுவாயை உணருவாரா?

புதுடில்லி, நவ. 5—

"சமூக நலத்திற்குப் பாடுபடாத ஒரு சர்க்கார் இருந்து தான் என்ன உபயோகம்? நவீன காலத்தில் ஒரு சர்க்காரின் எல்லா நடவடிக்கைகளும், சமூக நலத்திற்கானவையாகவே இருந்தாக வேண்டும். விரிவான பொருள் கொள்ள வேண்டுமானால் ஒரு சர்க்கார், சமூக நல கழகமாகவே இருக்கவேண்டும்.

"தனிப்பட்ட சமூக சேவா கழகங்கள் ஓரளவுக்கு உதவ முடியும்; ஆனால், சமூகத்தில் இடம் பெற்றுள்ள குறைபாடுகளை நீக்குவது ஒரு சர்க்காருடைய வேலையாகும்.

"ஏன் சமூகக் குறைபாடுகள் எழுகின்றன? அவை எப்படி எழுகின்றன?—என்பதுதான் அடிப்படையான கேள்வியாகும்.

"நோய் பரவுவதைத் தடுக்காமல் மருத்துவ மனைகளை மட்டும் திறந்துகொண்டே போவதினால் பலனில்லை.

"இரு நாடுகளுக்கிடையே சண்டை நிகழ ஏற்பாடு செய்துவிட்டு, பின்னர், காயம்பட்டோருக்கு மருத்துவ மனை திறப்பது எப்படி சரியானதாகும்? நமக்குள் சண்டையே மூளக் கூடாது.

"சேரிகளும், ஏழ்மையும் நீடிப்பதினால் எத்தனை வகையான தீங்குகள் தோன்றுகின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சேரிகள் நீடிக்கிற வரையில், நாம் என்ன தான் சமூக சேவையில் ஈடுபட்டாலும் நோயும், இதர தீங்குகளும் புதிது புதிதாக முளைத்துக் கொண்டுதான் இருக்கும்.

"தீமைகளின் தோற்றுவாய்களை நாம் கவனித்தாக வேண்டும்.

"சமூக சேவகர்கள்—உதவி செய்ய நினைப்போருக்கு ஏதோ இரக்கத்தினால் அப்படிச் செய்வதாக நினைக்கக்கூடாது; பிறருக்கு ஏதோ சாதகம் புரிவதாக எண்ணிக் கொள்ளக்கூடாது; பிறருக்கு அதிகமான உபதேசம் செய்யக்கூடாது

"தெருக் கூட்டும் தொழிலாளிக்கு உபதேசம் செய்வதால் என்ன பயன்? வாழ்வதற்கு வாய்ப்பே கிடைக்காதவர்கள் இந்தத் தொழிலாளர்கள்; அவர்களுக்குப் போதுமான உணவும், உடையும், சரியான இருப்பிடமும் இல்லை; அவர்களிடத்தில் போய் உபதேசம் செய்வது பலன் தராது; மாறாக, அந்தத் தொழிலாளரிடம் நட்புக்கொண்டு, நம்மையும், அவர்களையும் பிரித்துவைக்கும் 'சுவர்'களைத் தகர்த்தெறிந்து, அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்குப் பாடுபட வேண்டும்."

—என்று, பிரதமர் பண்டித நேரு, சமூக நலக் கழக ஆண்டு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"அண்மையில் விபசாரம் பற்றிய அறிக்கை ஒன்றைக் கண்ணுற்றேன்—வருத்தப்பட்டேன்.

"விபசாரம் போன்ற தீய காரியங்களை ஒழிப்பதற்கு என்று அமைந்துள்ள நிறுவனங்கள் பல, இந்த விபசாரத்தை ஊட்டி வளர்ப்பனவாக இருக்கின்றன என்று அறிக்கை மூலம் அறிய அதிர்ச்சியுற்றேன்.

"இந்த நிறுவனங்கள், விபசாரத்தை ஒழிப்பதற்கென பொதுமக்களிடம் பணம் திரட்டுகின்றன. இந்த சமூக நலக் கழகத்திடம்கூட பண உதவிக்கு வந்திருக்கலாம்.

"ஆனால் பணம் பெற்ற பின், அதனை—தாங்கள் எதற்கென்று பணம் வாங்கினார்களோ அதற்குச் செலவிடாமல், நேர் முரணான காரியங்களைச் செய்கின்றனர்; இது மிகவும் வருந்தற்குரியதாகும்.

"இத்தகு நிறுவனங்களையும் நபர்களையும் தண்டிப்பதற்கு சட்டம் வலுவுடையதாக இல்லை என்பதை அறிய மேலும் வருத்தப்பட்டேன். அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள தனி மனித சுதந்திரத்தைப் புகலாகக்கொண்டு இந்த நபர்கள் தப்பித்துவிடுகின்றனர். 'தனி மனித சுதந்திரம்' என்ற போர்வையில் குற்றம் புரியலாமென்பது சரியான எண்ணமாகுமா? நான் தனி மனித சுதந்திரத்தைப் பெரும்பாலும் மதிப்பவன் என்றாலும், இந்த வகையான உரிமையையும், சுதந்திரத்தையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை."

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மௌலானா ஆசாத், சமூக சேவையில் ஈடுபட்டுள்ள இயக்கங்களின் எண்ணிக்கை இந்தியாவில் 3000 என்றும், இவற்றில் சுமார் 100 நிறுவனங்கள் வரை தோல்வியையே கண்டிருக்கின்றன என்றும், இவை குறித்தும் சமூகநலக் கழகம் மிக விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

எங்கு நிறுவப்படும்?

இந்தியாவில் மின்சார இயந்திர உற்பத்திச் சாலை

ஒப்பந்தம் ஏற்படும் கட்டம் நெருங்கிவிட்டதாம்!

மின்சாரக் கன இயந்திர உற்பத்திச்சாலை ஒன்றை இந்தியாவில் ஏற்படுத்துவது சம்பந்தமாக இந்திய சர்க்காருக்கும் — பிரிட்டிஷ் நிறுவனமொன்றுக்கும் நடைபெறும் பேச்சு வார்த்தைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாம்; ஒரு வாரத்திற்குள் ஒப்பந்த விதிகள் தயாராகிவிடுமாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலுள்ள முக்கியமான தொழில் திட்டங்களில் கனரக மின்சார இயந்திரங்கள் உற்பத்தியும் ஒன்றாகும். இதற்காக சுமார் ரூ 20 கோடி செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உற்பத்திச் சாலையை எங்கு ஏற்படுத்துவது?—ஒரே இடத்தில் ஏற்படுத்தலாமா, அல்லது இரண்டு இடங்களில் ஏற்படுத்துவதா என்ற பிரச்சினை பலமாக உள்ளதால், அதுபற்றி பின்னர் தீர்மானிக்கக் கூடுமாம்.

உற்பத்திச் சாலை, தளவாடங்கள் ஆகியவற்றுக்காக ரூ. 15 கோடியும், தொழிலாளர் பயிற்சித் திட்டம்—குடியிருப்பு வசதிகளுக்காக ரூ. 15 கோடியும் தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகிறதாம்.

மத்திய ஆட்சியினர் பரிசீலனை செய்கின்றனர்?

சென்னை, நவ 6—

சென்னை நகரசபை சிப்பந்திகளுக்கும் அரசாங்கத் தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டத்தைப் பரவலாக்குவது பற்றி மத்திய சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

சிபாரிசுகள் செய்து விட்டுக் கலைந்தனர்!

மூன்று நாள் மாநாடு முடிவடைந்துவிட்டது

விவசாயத் தொழிலாளர் வேலை வாய்ப்புக்கு முதலிடம் கிட்டுமா?

ஐதராபாத், நவ. 5—

மூன்று நாட்களாக இங்கு நடைபெற்ற தொழிலாளர் நல மந்திரிகள் மாநாடு இன்று முடிவடைந்துவிட்டது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கிராமாந்திரங்களில் விவசாயத் தொழிலாளிகளுக்கு அதிகப்படியான அளவுக்கு வேலையளிப்பு வசதிகள் செய்து தருவதற்கு ஒரு தெளிவான கிராமக் கைத்தொழில் கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டுமென மாநாடு கருதியதாம்

சிலவகைப் பொருள்களின் உற்பத்தியை கிராமக் கைத்தொழில்களுக்கென ஒதுக்கவேண்டுமென்பது மாநாட்டின் முக்கிய யோசனைகளில் ஒன்றாம்!

விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியங்கள் தொடர்ந்து நிர்ணயிக்க வேண்டுமென்பதில் பொதுவாக உடன்பாடு காணப்பட்டதாம்; ஆனால், அதை அமுலுக்குக் கொண்டு வருவதில் இப்போதும் காணப்படும் சிக்கல்களை மட்டுமின்றி, இடைஞ்சல்களையும் அமைச்சர்கள் கவனித்தனராம் அந்த இடைஞ்சல்கள். இப்போது இந்தியாவில் நிலவி வரும் இந்தியாவின் தொழில் அமைப்புடன் உடன்பிறந்ததாகும் என்று சுட்டிக் காட்டப்பட்டதாம்

5 இலட்சத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் தற்போது 176-இலட்சம் விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் உள்ளன.

மாநாட்டின் கருத்துக்களைப் பரிசீலனை செய்து, உபதொழில்களையும் உடனடியாக அபிவிருத்தி செய்வதில் அதிகபட்ச அளவுக்கு இந்திய சர்க்காரும்; திட்டக் குழுவும் கவனம் செலுத்தவேண்டுமென்று மாநாடு கோரியதாம்.

கிராமாந்திரங்களின் வருமானம் அதிகரித்து மக்களின் வாங்கும் சக்தி பெருகினால் கிராமங்களுக்கு மட்டுமின்றி, நாடு முழுமைக்கும் பெரும் நன்மை ஏற்படுமென்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனராம். நாட்டின் வாழ்க்கைத் தர உயர்வும், முன்னேற்றமும் எந்த அளவு அபிவிருத்தியடைந்திருக்கிறது என்பதை நிர்ணயிப்பதற்கு விவசாயப் பகுதிதான் சிறந்த அளவுகோலாகும் என்றும் குறிப்பிட்டுள்ளனராம்.

கண்காட்சியில் இருந்த 'கதிர் இயக்க'ப் படிகம்

காணமற்போய்விட்டதாம்!

மைசூர், நவ. 5—

மைசூர் கண்காட்சியில், அணுசக்தி குழுவின் பிரிவிலிருந்த இரண்டு இராத்தல் எடையுள்ள ஒரு 'மோனசைட்' படிகம் நேற்று முன்தினம் முதல் காணவில்லையாம்

20 முதல் 50 சதவிகிதம் 'கதிர் இயக்க' தோரியம் சக்தி கொண்ட இப்படிகத்தை எவராவது தொட்டால், தோலின் மேல் பாகம் பாழ்பட்டுவிடுமாம்!

எகிப்து-இஸ்ரேல் போரை நிறுத்த அமெரிக்கா முயற்சி

ஐ. நா. பிரரேபணைகளை ஏற்குமாறு கோரிக்கை

வாஷிங்டன், நவ 5—

சினய் பாலைவனப் பிரதேசத்தில், இஸ்ரேலுக்கும்—எகிப்துக்குமிடையே ஏற்பட்டுள்ள எல்லைப்புறப் போரை நிறுத்துவதற்கு ஐ நா. சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள சமரசப் பிரரேபணைகளை ஏற்றுக்கொள்ளுமாறு இருதரப்பு நாடுகளையும் அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளதாம்.

ஐ நா. பொதுக் காரியதரிசி தெரிவிக்கும் எந்த யோசனைகளையும் தனது சர்க்கார் அனுதாபத்துடன் பரிசிலனை நடத்துவதற்குத் தயாராக இருப்பதாக இஸ்ரேல் தூதுவர் கூறியுள்ளார்.

வேண்டுமென்றே, முன்னேற்பாட்டுடன் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பதாக எகிப்து தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

எகிப்துக்கு இராக் உதவி?

இஸ்ரேலின் தாக்குதலை முறியடிப்பதற்கு எகிப்து எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளில் பங்கெடுக்கவும், இராணுவ உதவி செய்வதற்கும் தயாராக இருப்பதாகவும் எகிப்து தூதரிடம் இராக அயல் நாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளாராம்.

இஸ்ரேல் தாக்குகிறது

கெய்ரோ, நவ 6—

கவச மோட்டார்களுடன், இஸ்ரேல் படைகள் காஜா அருகுக் கிழக்கில் கான்யூனஸ் பிரதேசத்தைத் தாக்குவதற்கு முனைந்தவுடன் எகிப்து திருப்பித் தாக்குவதற்கு முற்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

பலமிக்க பீரங்கித் தாக்குதலினால் இஸ்ரேல் பின் வாங்கியதாகவும், ஆனால் இரண்டாவது இஸ்ரேல் படை உதவிக்கு வந்துவிடவே, எகிப்தின் கரையோரப் பகுதிகளில் 1 200 கெஜம் தூரம் இஸ்ரேலியர் புகுந்துவிட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேல் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாம்!

ஒரு இஸ்ரேல் விமானத்தை சிரியா விமான எதிர்ப்புப் பீரங்கிகள் சுட்டு வீழ்த்தியதாகவும் அந்த விமானம் லெபனான் பகுதியில் தீப்பற்றி எரிந்து வீழ்ந்ததாகவும் கெய்ரோ வானொலி அறிவித்துள்ளதாம்.

ஜோர்டான் எல்லைக்குள் இஸ்ரேலியர் ஊடுருவினர்

இஸ்ரேல் ரோந்தப் படைகள், பத்து மைல் தூரம் ஜோர்டானுக்குள் ஊடுருவிப் பாய்ந்ததாகவும், அவைகள் திருப்பித் துரத்தப் பட்டதாகவும், இஸ்ரேலியர் பீரங்கிப் பிரயோகம் செய்ததாக ஜோர்டான் குற்றஞ் சாட்டியிருப்பதாகவும், ஆனால் சேதமேதும் ஏற்படவில்லையென்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கெய்ரோ வானொலி அறிவித்துள்ளதாம்.

படைகள் குவிகிறது?

ஜெருசலேம், நவ 6—

இராணுவ சூனியப் பகுதியில், போர் நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு அதிகமாகப் படைகளை, எகிப்து குவித்து வைத்திருப்பதாக இஸ்ரேல் அயல் நாட்டுப் பிரமுகர் ஒருவர் கூறியுள்ளாராம்.

'பயமுறுத்தல்களுக்கு பணியமாட்டோம்!'

கராச்சி, நவ. 5—

எல்லைகளைக் கடந்து, 4,000 மலைப்பகுதியினர், பாகிஸ்தானுக்குள் இரண்டு மைல் தூரம் வந்துள்ளனராம்.

மலைப்பகுதியினர் தாக்குதல்களுக்கு ஆப்கனிஸ்தான் ஊக்கமளித்துக் கொண்டிருப்பதாகத் தகவல் எட்டியுள்ளதாகவும், எவ்விதப் பயமுறுத்தல்களுக்கும், எதிரான நடவடிக்கைகளுக்கும் பணிந்துவிடப் போவதில்லையென்றும் பாகிஸ்தான் அயல்நாட்டு இலாகா அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்

இராஜஸ்தான் பாலைவன 'சர்வே'

ஐ. நா. நிறுவனம்மேற்கொள்ளும்?

பம்பாய், நவ. 6—

"இராஜஸ்தானில் உள்ள பாலைவனத்தை ஐ நா கல்வி, சமூக, கலாச்சார நிறுவனத்தார் 'சர்வே' செய்ய முற்படலாம்,"

என்று, இந்திய விஞ்ஞான தொழில் ஆராய்ச்சித்துறைத் தலைவரான பேராசிரியர் தக்கர் தெரிவித்திருக்கிறார்.

ஐ. நா. நிறுவனத்தார், இந்தப் பாலைவன 'சர்வேக்'காக ரூ. 10 இலட்சம் செலவிட எண்ணியுள்ளனராம்.

இப்போது டில்லியில் நடைபெறுவருகிற இந்தியத் தொழில்கள் கண்காட்சியில், சுமார் 60 000 சதுரஅடி பரப்பளவிலுள்ள விசேடப் பகுதி ஒன்றில் இந்திய சர்க்காரின் பல்வேறு வேலைத் திட்டங்களைச் சித்தரிக்கும் காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன பொதுத் துறையில் தொழில்கள் ஆற்றிவரும் பணிகள் ஏராளமான மாதிரி உருவங்கள், வரைபடங்கள்; புகைப் படங்கள் ஆகியவை மூலம் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளன.

என். எஸ். அருணாசலம் இயற்கை எய்தினர்

சென்னை, நவ. 5—

சென்னை சர்க்கார் கைத்தொழில், தொழிலாளர் இலாகா செயலாளர் திரு என் எஸ். அருணாசலம் (ஐ சி. எஸ்.) அவர்கள், நேற்றிரவு 1-30 மணிக்கு, சென்னையில் அவரது இல்லத்தில், திடீரென்று மாரடைப்பினால் இயற்கை எய்திவிட்டார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

அவருக்கு 53 வயது ஆகும். இன்று பிற்பகல், மைலாப்பூர் இடுகாட்டில் அவரது பிரேத எரியூட்டல் நடைபெற்றது.

நெய்வேலியிலா ......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூடும். ஒரு இத்தாலியக் கம்பெனியின் கூட்டு உதவியுடன் இந்திய சர்க்கார் இதை மேற்கொள்ளும்.

இரண்டாவது உரத் தொழிற்சாலை நங்கலிலும், மூன்றாவது தொழிற்சாலையை பம்பாயிலும் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. நான்காவது தொழிற்சாலை எங்கு நிறுவப்படுமென இன்னும் முடிவாகவில்லை இது சம்பந்தமாக தென்னாட்டில் உள்ள நெய்வேலியும், விஜயவாடாவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

பழுப்பு நிலக்கரித் திட்டம் பொருளாதார ரீதியில் வெற்றியடைந்தால், நெய்வேலியே தேர்ந்தெடுக்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.